**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 59/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 19.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண்குமார் | ஜாதி | : | |
| தந்தை–பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சுந்தரராஜபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தந்தை ஆவார். இறந்தவர் யுவராஜ் எனது அண்ணன். நான் பொதட்டுர்பேட்டையில் உள்ள ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் Senior Exsecutive வேலை செய்கிறன். என்னுடன் பிறந்தவர்கள் அண்ணன் மற்றும் தங்கை ஆவார். எங்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. என்னுடைய அத்தை மகளை என்னுடைய அண்ணனுன்கு திருமணம் செய்தோம். திருமணத்திற்கு முன்பு எனது அண்ணி ராமசந்திர மருத்துவமனையில் சேவிலியராக பணிபுரிந்து வந்தார். திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரி எனது அன்னி திருத்தனியில் உள்ள Peacock மருத்துவமனையில் வேலை செய்துவந்தார். எனது அன்னிக்கும் ஸ்ரீனிவாசன் என்பவருக்கும் கள்ளதொடர்ப்பு இருந்ததாக தெரியவந்தது. எனது அன்னியும், 2ம் எதிரி ஸ்ரீனிவாசனுக்கும் அடிக்கடி செல்போனில் பேசுவதால் அவர்களுக்கு தொடர்ப்பு ஏற்பட்டுள்ளது. 19.02.2023ம் இரவு 11.30 மணிக்கு எங்கள் கிராமத்தை சேர்ந்த தங்கராஜ் மற்றும் ஆனந்தன் என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்து என் அண்ணன் வீட்டிற்கு பின்னே கயினி அருகே இரண்டு சக்கர வாகனம் மற்றும் மூன்று ஜோடி செருப்பு இருப்பதாக சொன்னார்கள். வீட்டின் அருகே ஆட்கள் நடமாட்டம் இருந்ததாக

சொன்னார்கள். நானும், என் அப்பாவும் சென்று வீட்டு அருகே போகும் போது இரண்டு இரு சக்கர வண்டி அங்கிருந்து சென்றுவிட்டது. அந்த இரண்டு வண்டியில் மூன்று நபர்கள் சென்றார்கள். அதன் பிறகு நாங்கள் என் அண்ணன் வீட்டிற்கு வந்தோம். கதவு தட்டி பார்த்தோம் யாரும் எழுந்திருக்கவில்லை. நாங்கள் வந்துவிட்டோம். அதிகாலை 4.30 மணிக்கு என்னுடைய பாட்டி கத்தி கொண்டு என் வீட்டிற்கு வந்தார். நான் அன்னன் வீட்டிற்கு சென்று பார்த்தேன். மூச்சி பேச்சு இல்லாமல் இருந்தார். அவருடைய கழுத்தில் கீரல் இருந்தது, உதடு நசுங்கிய நிலையிலும், கால் தொடை கீரல்கள் இருந்தது. எழுப்பி பார்த்தும் எழுந்திருக்கவில்லை. என் அப்பாவும், அம்மாவும் ஆர்.கே.பேட் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தார்கள். எனது அன்னன் இறந்துவிட்டதால் பிரேதத்தை முதலில் திருத்தனி அரசு மருத்துவமனைக்கும், பிறகு திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைத்தார்கள். 21.02.2023 அன்று காவல் நிலையத்திற்கு வந்து எங்களை அழைத்தார்கள். காவல் நிலையத்தில் இருந்த இரண்டு இரு சக்கர வண்டியை காண்பித்தார்கள். அந்த வண்டியை அடையாளம் காட்டினேன். மேலும் எதிரிகளை அடையாளம் காட்ட சொன்னார்கள். காண்பிப்பதாக சொன்னேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். அந்த வண்டிகள் Scooty ஒன்று, கருப்பு நிற Delux பெரிய வண்டி ஒன்று ஆகும்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.01.19 17:41:54 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 59/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 19.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | சொக்கலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் சுந்தரராஜபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 என்னுடைய வீட்டிற்கு அருகே வசிக்கிறார்கள். 19.02.2023 இரவு 11.30 மணி அளவில் நான் அன்று இரவு கயினிக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு என்னுடைய நிலத்திற்கு சென்ற போது என் நிலத்தின் அருகே இரண்டு இரு சக்கர வண்டிகள் மற்றும் மூன்று ஜோடி செருப்புகள் இருந்தது, அதில் ஒரு வண்டி நீல கலர் மற்றும் கருப்பு கலர் பெரிய வண்டி ஆகும். இறந்த யுவராஜ் வீட்டின் அருகே ஆட்கள் நடமாட்டம் இருப்பதாக அவருடைய அப்பாவிடம் சென்று கூறினேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் இறந்த யுவராஜ் வீட்டிற்கு வந்தார்கள். பிறகு அதிகாலை 4.30 மணிக்கு நான் மீண்டும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு சென்று 5.30 மணி அளவில் தண்ணீர் பாய்ச்சுவிட்டு நான் திரும்பி வரும் போது யுவராஜ் வீட்டில் அவருடைய அத்தை அழுது கொண்டிருந்தார்கள். நான் ஓடி பார்த்த போது யுவராஜ் இறந்துகிடந்தார். நான் வந்து பார்த்த போது இறந்த யுவராஜ்ன் கழுத்தில் மற்றுர் மார்பில் கீரல்கள் இருந்தது. அதன் பிறகு புகார் கொடுத்து போலிசார் அங்கு வந்தனர் அப்போது என்னை விசாரணை செய்தனர். விசாரணையின் போது வண்டியின் கலர் பற்றியும் வண்டி பற்றியும் கூறினேன்.

போலிசார் செல்பேனில் சில வண்டிகளை காண்பித்து என்னை விசாரணை செய்தார்கள். அப்போது செல்போனில் இருந்த வண்டிகளை காண்பித்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.01.19 17:42:00 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.